மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ரூபாய் 23.64 இலட்சம்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுக்களில் பெரும்பாலும் எண்ணிக்கையைத் திருத்தக்கூடிய சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றனவே? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எண்ணிக்கையைத் திருத்தினாலும், வேறு வகைகளில் கண்டுபிடிக்கக்கூடிய அளவில் குறிப்புக்கள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

Destruction of Nylon fishing nets at Oorur Kuppam

* 511 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state wheher nylon fishing nets were destroyed by fire at Oorur Kuppam near Adyar in Madras City about the 6th April, 1971?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம். ஊரூர் குப்பத்தில் 5—4—71 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இத்திவிபத்தில், திருமதி முத்தம்மாள் என்பவருக்குச் சொந்தமான ரூ. 2,000 மதிப்புடைய இரண்டு நைலான் வலைகள் சேதமடைந்து பயனற்றுப் போய்விட்டன.

Supply of nylon twine to fishermen.

* 512 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) the grounds on which the Nylon nets are being sold to fishermen in this state; and

(*b*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்கும் பணியை மாநில மீனளத்துறை மேற்கொண்டிருக்கவில்லை. கீழ்க்கண்ட இரு திட்டங்களின்கீழ் நைலான் மீன்பிடி முறுக்கு நூல் மட்டுமே வழங்கப்படுகிறது:—

(1) ஈடுசெய் விலை அடிப்படையில் மீனவர்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் வழங்குதலுடன் கூட நைலான் நூலும் வழங்குதல்.

(2) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீனவர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் முறுக்கு நூல் வழங்குதல் முதல் திட்டத்தின்கீழ், மீன்பிடி விசைப் படகுகள் ஒதுக்கம் செய்யப்படும் பொழுது 30 அடி நீளப் படகுக்கு 100 கிலோ நைலான் முறுக்கு நூலும், 32 அடி நீளப்படகுக்கு 150 கிலோ நைலான் முறுக்கு நூலும் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நைலான் முறுக்கு நூல் விலையில் 20 சதவீதம் குறைத்து வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை, ரெண்டாண்டுகால அளவுக்குள் 18 மாதத்தவணைகளில் வசூல் செய்யப்படுகிறது